**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருக்கழுக்குன்றம்.**

முன்னிலை :– **திரு.S.வினீத், B.A.,B.L.,(Hon's)**
மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
திருக்கழுக்குன்றம்.

2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 30 ம் நாள் திங்கட்கிழமை
விசுவாவசு வருடம் பங்குனி மாதம் 16 ம் நாள்

**ஆண்டு பட்டிகை வழக்கு எண் 90/2021**
**CNR No.TNCG120002722021**

அரசு தரப்பில்
காவல் ஆய்வாளர்,
சட்ராஸ் காவல் நிலையம்,
குற்ற எண் 171/2018.

.. குற்றமுறையிடுபவர்.

எதிர்

சண்முகம், வயது 43/2018, த/பெ.பாலு

.. எதிரி.

**<u>Case Summary</u>**

| Sl. No | Particulars | Report |
|---|---|---|
| 1 | The Period of remand of the accused | NIL |
| 2 | The date of filing of the complaint/final report in the Court | 25.11.2021 |
| 3 | The date of committal of the case to the Court of Session | Not Applicable |

| | | |
|---|---|---|
| 4 | The date of questioning of the accused under Sections 228, 240, 246 and 251 of the Code of Criminal Procedure, 1973, as the case may be | 06.05.2025 |
| 5 | Filing of all miscellaneous petitions and their results including the results on challenge before superior Courts: except routine petitions like petitions under Section 317 of the Code: | NIL |
| 6 | Date of examination in-chief and cross- examination of a witness: | <table><tr><td></td><td>Chief</td><td>Cross</td></tr><tr><td>PW1</td><td>09.06.2025</td><td>09.06.2025</td></tr><tr><td>PW2</td><td>09.06.2025</td><td>09.06.2025</td></tr><tr><td>PW3</td><td>09.06.2025</td><td>09.06.2025</td></tr><tr><td>PW4</td><td>18.08.2025</td><td>18.08.2025</td></tr><tr><td>PW5</td><td>23.03.2026</td><td>23.03.2026</td></tr></table> |
| 7 | Date of examination of the accused under Section 313 of the Code: | 26.03.2026 |
| 8 | Details of abscondence of an accused and his appearance/ productions, as the case may be: and NBW Pending /recalled | NIL |
| 9 | Grant of stay by superior Courts and the results thereof. | NIL |

இவ்வழக்கு கடந்த 29.12.2021 அன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு, அரசு தரப்பில் அரசு உதவி குற்ற வழக்கு நடத்துனர் நிலை 1 அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர்கள்

திரு.M.செல்லபாண்டியன், திரு.M.லோகேஷ்வரன் ஆகியோர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றப் பரிசீலனையில் இருந்து வந்த இந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**தீர்ப்புரை**

**1.** எதிரி மீது, அரசு தரப்பில் தாக்கல் செய்துள்ள இறுதி அறிக்கையில், கடந்த 24.06.2018ம் தேதி இரவு 7.30 மணியளவில் கிழக்கு கடற்கரை சாலை டி.கே.வி. திருமண மண்டபம் எதிரில் இவ்வழக்கின் எதிரி சண்முகம் TN 05 AM 7435 என்ற பதிவு எண் கொண்ட Tata Ace வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டிச் சென்று மேற்படி ரோட்டில் இடது புற ஓரமாக நடந்து சென்றுக்கொண்டிருந்த ஜெகதா என்பவர் மீது மோதி விபத்து ஏற்படுத்தி மேற்படி ஜெகதா என்பவருக்கு இறப்பினை ஏற்படுத்திய குற்றத்திற்காக எதிரி இ.த.ச. பிரிவுகள் 279, 304(A)–ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றங்கள் புரிந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

**2.** எதிரி நீதிமன்றத்தில் ஆஜரானதும் அவருக்கு வழக்காவணங்களின் நகல்கள் யாவும் கு.வி.மு.ச பிரிவு 207ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

**3.** எதிரிக்கு ஆவணங்களை பரிசீலனை செய்ய போதிய கால அவகாசம் கொடுக்கப்பட்டு, ஆவணங்களை பரிசீலனை செய்து, எதிரியிடம் இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 279, 304(A)–ன் கீழான குற்றங்கள் குறித்து விளக்கிக்கூறி வினவியபோது குற்றங்களை எதிரி மறுத்ததால் அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

**4.** அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.5 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**5.** அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களின் சாராம்சம் பின்வருமாறு:–

**5.1.** புகார்தாரர் அ.சா.1 தனது சாட்சியத்தில், கடந்த 2018ம் வருடம் 6ம் மாதம் ஒரு நாள் தனது மனைவி ஜெகதா கல்பாக்கம் டவுன் ஷிப்பில் டீ கடையில் வேலை முடித்துவிட்டு வீட்டிற்கு நடந்து வந்துக் கொண்டிருந்த போது டி.கே.வி. கல்யாண மண்டபம் அருகே எதிரே வந்த டாரஸ் ஏர்ஸ் வாகனம் தன் மனைவி மீது மோதி விபத்து ஏற்படுத்தி அங்கிருந்த நபர்கள் ஆம்புலன்ஸ் மூலம் செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்ததாக தான் கேள்விப்பட்டு மருத்துவமனை சென்று பார்த்தபோது தன் மனைவிக்கு பின் தலையில் பலத்த காயம் ஏற்பட்டிருந்தது என்றும், தன் மனைவியை மேல் சிகிச்சைக்காக சென்னை ராஜுவ்காந்தி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று இரண்டு நாட்கள் கழித்து விபத்து குறித்து சட்ராஸ் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும், 28.06.2018 அன்று தன் மனைவி சிகிச்சை பலனில்லாமல் இறந்துவிட்டார் என்று சாட்சியம் அளித்துள்ளார். புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டது.

**5.2.** அ.சா.2, அ.சா.1ன் சாட்சியத்தை ஒத்து சாட்சியம் அளித்துள்ளார்கள்.

**5.3.** அ.சா.3 தனது சாட்சியத்தில், கடந்த 2018ம் வருடம் ஒரு நாள் தான் கல்பாக்கம் சென்றுவிட்டு திரும்பி வந்துக் கொண்டிருந்த போது

டி.கே.வி. கல்யாண மண்டபம் அருகே சுமார் இரவு 7.30 மணியளவில் ஒரு பெண்மணி தனக்கு எதிராக சிறிது தூரத்தில் நடந்து வந்துக் கொண்டிருந்த போது டாமல் என்று ஒரு சத்தம் கேட்டது என்றும், டாடா ஏர்ஸ் வாகனம் அந்த பெண்மணி மீது மோதி விபத்து ஏற்பட்டது என்றும், தான் சென்று பார்த்தபோது அந்த பெண்மணி தங்கள் ஊரை சேர்ந்த ஜெகதாம்பாள் என்று தெரிந்துக் கொண்டதாகவும், அவருக்கு பின் தலையில் காயம் ஏற்பட்டிருந்தது என்றும், அதன் பிறகு 108 க்கு போன் செய்தார்கள் என்றும், அவரை சிகிச்சைக்காக செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள் என்றும், இரண்டு நாட்கள் கழித்து ஜெகதாம்பாள் சிகிச்சை பலனில்லாமல் இறந்துவிட்டார் என்று கேள்விப்பட்டதாக சாட்சியம் அளித்துள்ளார்.

**5.4** அ.சா.4 தனது சாட்சியத்தில், கடந்த 2018 ம் வருடம் ஒரு நாள் தான் கல்பாக்கம் நோக்கி சென்றுக் கொண்டிருந்த போது TKV திருமணம் மண்டபம் அருகே விபத்து நடந்த இடத்தில் போலிசார் சம்பவ இடத்தில் விசாரணை செய்து படம் வரைந்ததில் தன்னிடம் சாட்சியாக கையொப்பம் கேட்டார்கள் என்றும், தானும் சாட்சி நாகமுத்துவும் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்தததாக சாட்சியம் அளித்துள்ளார். பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டது.

**5.5** அ.சா.5 காவல் ஆய்வாளர் தனது சாட்சியத்தில், கடந்த 26.06.2018 ம் தேதி திருக்கழுக்குன்றம் வட்ட ஆய்வாளராக பணியில் இருந்த போது சட்ராஸ் காவல் நிலையத்தில் காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் ராமானுஜம் நிலைய பொறுப்பில் இருந்த போது மாணிக்கம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று நிலைய குற்ற எண்.

171/2018 இ.த.ச. பிரிவுகள் 279, 337ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து அ.சா.4, சாட்சி நாகமுத்து ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து, சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து, காயம்பட்ட ஜெகதா என்பவருக்கு முதல் உதவி சிகிச்சை அளித்த மருத்துவர் சதீஷ்ராஜன் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்று பெற்று, காயம்பட்ட ஜெகதா மேல் சிகிச்சைக்காக சென்னை ராஜூவ் காந்தி அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பலனில்லாமல் இறந்துவிட்டதால் வழக்கின் சட்டப்பிரிவினை 279, 337 இ.த.ச. விலிருந்து 279, 304(A) இ.த.ச. வாக பிரிவு மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்து வைத்திருந்த வழக்கினை தனது விசாரணைக்கு எடுத்துக் கொண்டு இவ்வழக்கில் இறந்துபோன ஜெகதா என்பவரின் பிரேதத்தின் மீது ராஜூவ்காந்தி அரசு மருத்துவமனையில் பஞ்சாயத்தார்கள் மற்றும் சாட்சிகள் முன்னிலையில் பிரேத விசாரணை செய்து அறிக்கை தயார் செய்து கடந்த 09.07.2018ம் தேதி மாலை 4.00 மணியளவில் நிலையம் ஆஜரான எதிரியை கைது செய்து தக்க பிணையில் விடுவித்து இறந்துபோன ஜெகதா என்பவரின் பிரேதத்தின் மீது பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் ஜெயக்குமார் என்பவரை விசாரணை செய்து அவரிடமிருந்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற்று, விபத்து ஏற்படுத்திய வாகனமான TN 05 AM 7435 TATA ACE வாகனத்தை ஆய்வுக்குட்படுத்தி மோட்டார் வாகன ஆய்வாளர் சோமசுந்தரம் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து ஆய்வு அறிக்கை பெற்று, வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரி மீது

இ.த.ச. பிரிவுகள் 279, 304(A)–ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தார் என சாட்சியம் அளித்துள்ளார். முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆகவும், காயச்சான்று அ.சா.ஆ.5 ஆகவும், சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.6 ஆகவும், பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.7 ஆகவும், பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.8 ஆகவும், மோட்டார் வாகன ஆய்வு அறிக்கை அ.சா.ஆ.9 ஆகவும் குறியீடு செய்யப்பட்டது. இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

**6.** இவ்வழக்கில் அரசுத் தரப்பு சாட்சியங்களில் எதிரிக்கு பாதகமாக அமைந்த அரசு தரப்பு சாட்சிய பகுதிகளை எடுத்துரைத்து, கு.வி.மு.ச. பிரிவு 313(1), (ஆ)ன் கீழ் சுட்டிக்காட்டி வினவியபோது எதிரி அரசுத் தரப்பு சாட்சிகள் கூறுவது பொய் சாட்சி என்றும், தான் குற்றவாளி இல்லை என்றும், தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறி எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

**7.** கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தின் போது அ.சா.1 முதல் அ.சா.5 ஆகியோரின் சாட்சியங்கள் மற்றும் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்கள் மூலம் எதிரி சம்பவத்தன்று TN 05 AM 7435 என்ற பதிவு எண் கொண்ட Tata Ace வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டிச் சென்று மேற்படி ரோட்டில் இடது புற ஓரமாக நடந்து சென்றுக்கொண்டிருந்த ஜெகதா என்பவர் மீது மோதி விபத்து ஏற்படுத்தி ஜெகதா என்பவருக்கு இறப்பினை ஏற்படுத்தியுள்ளார் என தெளிவாக தெரியவருகிறது என்றும், எனவே, எதிரி இ.த.ச. பிரிவுகள் 279, 304(A)–ன்

கீழ் குற்றவாளி என்று தீர்மானித்து அதிக பட்ச தண்டனை வழங்குமாறு வாதிட்டார்.

**8.** கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில், இவ்வழக்கில் விபத்தை கண்ணுற்ற சாட்சியாக முன்னிலைபடுத்தப்பட்டுள்ள அ.சா.2 டமால் என்று சத்தம் கேட்ட பின்பு தான் விபத்து குறித்து தெரிந்துக்கொண்டார் என்றும், மற்ற அனைத்து சாட்சிகளுமே விபத்து குறித்து கேள்விப்பட்ட சாட்சிகள் மட்டுமே என்றும், ஆகவே சந்தேகத்தின் பலன்களை எதிரிக்கு அளித்து எதிரியை விடுதலை செய்யுமாறு வாதிட்டார்.

**9.** இவ்வழக்கில் தற்போது தீர்மானிக்கப்படவேண்டியது யாதெனில் எதிரி மீதான இ.த.ச. பிரிவுகள் 279 மற்றும் 304(A)–க்கான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதே ஆகும்.

**9.1.** அரசு தரப்பில் இவ்வழக்கு சம்பவமாக கடந்த 24.06.2018 ம் தேதி இரவு 7.30 மணியளவில் கிழக்கு கடற்கரை சாலை டி.கே.வி. திருமண மண்டபம் எதிரில் இவ்வழக்கின் எதிரி சண்முகம் TN 05 AM 7435 என்ற பதிவு எண் கொண்ட Tata Ace வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டிச் சென்று மேற்படி ரோட்டில் இடது புற ஓரமாக நடந்து சென்றுக்கொண்டிருந்த ஜெகதா என்பவர் மீது மோதி விபத்து ஏற்படுத்தி மேற்படி ஜெகதா என்பவருக்கு இறப்பினை ஏற்படுத்தியுள்ளார் என்று எதிரி மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

**9.2.** இவ்வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அவர்களுள் அ.சா.1 மற்றும், அ.சா.2

இருவரும் விபத்து குறித்து கேள்விப்பட்டு மருத்துவமனை சென்று பார்த்ததாக சாட்சியம் அளித்துள்ளார்கள். மேலும், மேற்படி அ.சா.1, அ.சா.2 இருவரும் எதிரி தரப்பு குறுக்கு விசாரணையின் போது சம்பவம் குறித்து நேரடியாக தெரியாது என்றால் சரிதான் என்றும், விபத்து குறித்து கேள்விப்பட்டு தான் தெரிந்துக் கொண்டதாகவும் ஒப்புக் கொண்டுள்ளதை காணும் போது மேற்படி அ.சா.1, அ.சா.2 இருவரும் விபத்து சம்பவம் குறித்து செவி வழி சாட்சிகள் மட்டுமே என்று தெரியவருகிறது.

**9.3.** இவ்வழக்கில் அ.சா.4 போலிசார் சம்பவ இடத்தை பார்வையிட்டபோது உடனிருந்து கையொப்பம் செய்ததாக மட்டுமே சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.4, விபத்து எவ்வாறு நடந்தது என்பது குறித்தோ, விபத்தானது யாருடைய கவனக்குறைவாலும், அஜாக்கிரதையாகவும் ஏற்பட்டுள்ளது என்பது குறித்தோ அறிந்திருக்க வாய்ப்பில்லை என்றும் இந்நீதிமன்றம் கருதுகிறது.

**9.4** இவ்வழக்கில் விபத்து சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ள ஒரே சாட்சியாக அ.சா.3 தனது முதல் விசாரணையில் "*டி.கே.வி. கல்யாண மண்டபம் அருகே சுமார் இரவு 7.30 மணியளவில் ஒரு பெண்மணி எனக்கு எதிராக சிறிது தூரத்தில் நடந்து வந்துக் கொண்டிருந்தார். அப்போது டமால் என்று ஒரு சத்தம் கேட்டது. டாடா ஏர்ஸ் வாகனம் அந்த பெண்மணி மீது மோதி விபத்து ஏற்பட்டது*" என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.3 எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில் " *விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் பதிவு எண் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அது இரவு நேரம் என்பதால் நான் கவனிக்கவில்லை. ஆனால் விபத்து ஏற்படுத்திய வாகனம் டாடா ஏர்ஸ் வாகனம் ஆகும். விபத்து*

*ஏற்படுத்திய வாகனத்தை யார் ஓட்டி வந்தார் என்பது குறித்து எனக்கு தெரியாது என்றால் சரிதான். மாணிக்கம் கொடுத்த புகாரில் விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் பதிவு எண் குறிப்பிடாமல் பதிவு எண் தெரியாது என்று புகார் எழுதி கொடுத்தார் என்றால் சரிதான்*" என்று ஒப்புக் கொண்டுள்ளார். அ.சா.1 மாணிக்கம் கொடுத்துள்ள அ.சா.ஆ.1 புகாரை பரிசீலிக்கையில் விபத்து ஏற்படுத்தியதாக கூறப்படும் வாகனத்தின் பதிவு எண்ணை whitener வைத்து பதிவு எண் தெரியாத டாடா Ace வாகனம் என்று திருத்தம் செய்யப்பட்டுள்ளது நன்கு தெரியவருகிறது. மேலும், சம்பவ இடம் பொறுத்து தயார் செய்துள்ள அ.சா.ஆ.4 மாதிரி வரைபடத்தை பரிசீலிக்கையில் விபத்தானது சாலையின் மையப் பகுதியில் நடைபெற்றதாக காண்பிக்கப்பட்டுள்ளது. அ.சா.3 தனது சாட்சியத்தில் விபத்து ஏற்படுத்தியதாக சொல்லப்படும் வாகனத்தின் பதிவு எண் குறித்தும் வாகனத்தின் ஓட்டுனர் குறித்து குறிப்பிட்டு சாட்சியம் அளிக்காத நிலையிலும், வாகனமானது அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வரப்பட்டது என்று குறிப்பிட்டு சாட்சியம் அளிக்காத நிலையிலும் அ.சா.3 ன் சாட்சியம் இவ்வழக்கிற்கு ஆதரவாக இல்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**9.5.** இவ்வழக்கில் மேற்கண்ட அரசுத் தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களை கவனமாக பரிசீலனை செய்கையில், இவ்வழக்கில், சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 ன் சாட்சியம் இவ்வழக்கிற்கு ஆதரவாக இல்லாத நிலையிலும், விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.1, அ.சா.3, அ.சா.4 அனைவரும் விபத்து குறித்து கேள்விப்பட்ட சாட்சிகள் என்பதாலும், இவ்வழக்கில் விசாரிக்கப்பட்டுள்ள எந்த ஒரு சாட்சியும்

விபத்து ஏற்படுத்தியதாக சொல்லப்படும் வாகனம் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வரப்பட்டது என்றோ, வாகனத்தின் பதிவு எண் குறித்தோ, வாகனத்தின் ஓட்டுனர் குறித்தோ குறிப்பிட்டு சாட்சியம் அளிக்காத நிலையில், அலுவல் ரீதியான சாட்சியான அ.சா.5 ன் சாட்சியங்களை மட்டும் கொண்டு எதிரியின் மீதான குற்றம் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாக முடிவுக்கு வருவது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்காது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**9.6.** எனவே, இ.த.ச. பிரிவு 279 ன் படி எதிரி விபத்து ஏற்படுத்தியதாக சொல்லப்படும் வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டினார் என்பதை தகுந்த சாட்சியங்கள் வாயிலாக நிரூபணம் செய்யப்படவில்லை என்று கருதி அதனால் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இ.த.ச. பிரிவு 304(A)ன் படியான குற்றச்சாட்டினை அரசு தரப்பில் போதுமான சாட்சிகளின் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்க தவறிவிட்டதாகவே இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**<u>10. முடிவாக</u>**

மேற்குறிப்பிட்ட காரணங்களை கருத்தில் கொண்டு, அரசுத் தரப்பு வழக்கில் எழும் சந்தேகத்தின் பலன்களை எதிரிக்கு அளித்து எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இ.த.ச. பிரிவுகள் 279 மற்றும் 304(A)–ன் கீழான குற்றச்சாட்டுக்களை ஐயம்திரிபற அரசு தரப்பில் நிரூபிக்கவில்லை என்றும் எனவே, எதிரியை மேற்சொன்ன பிரிவுகளின் கீழ் குற்றவாளி அல்ல

என்றும் தீர்மானித்து கு.வி.மு.ச. பிரிவு 255(1)ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

**11.** வழக்கு தடய சொத்துக்கள் ஏதும் உத்தரவிற்கு இல்லை.

இத்தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2026ம் ஆண்டு மார்ச் மாதம் 30ம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

(Sd) S.Vineeth, 30.03.2026
மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
குற்றவியல் நடுவர், திருக்கழுக்குன்றம்.

<u>பின் இணைப்பு</u>:–

<u>அரசு தரப்பு சாட்சிகள்</u>

| | |
|---|---|
| அ.சா.1 | திரு. மாணிக்கம் (புகார்தாரர்) |
| அ.சா.2 | திரு. சாந்தகுமார் |
| அ.சா.3 | திரு. சீனிவாசன் |
| அ.சா.4 | திரு. ஜெயகர் |
| அ.சா.5 | திரு. அய்யனாரப்பன், காவல் ஆய்வாளர். |

<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u>:–

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 26.06.2018 | அ.சா.1 கொடுத்துள்ள புகார் மனு |
| அ.சா.ஆ.2 | 27.06.2018 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.3 | 26.06.2018 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | 27.06.2018 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.5 | 24.06.2018 | காயச்சான்று |
| அ.சா.ஆ.6 | 28.06.2018 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை |

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.7 | 28.06.2018 | பிரேத விசாரணை அறிக்கை |
| அ.சா.ஆ.8 | 28.06.2018 | பிரேத பரிசோதனை அறிக்கை |
| அ.சா.ஆ.9 | 10.07.2018 | மோட்டார் வாகன ஆய்வு அறிக்கை |

அரசு தரப்பு சான்றுப் பொருள்:– இல்லை.

எதிரி தரப்பு சாட்சி:– இல்லை.

எதிரி தரப்பு சான்றாவணங்கள்:– இல்லை.

எதிரி தரப்பு சான்றுப் பொருள்:– இல்லை.

(Sd) S.Vineeth, 30.03.2026
மா.உ.நீ.ம.கு.ந./தி.க.கு.